IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 231/2018

சாட்சி : PW2

பெயர் : மணிமுத்து தேதி: 07-06-2024

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் சின்னமுத்து வீட்டிற்கு எலெக்ட்ரிக் மற்றும் பிளம்பிங் வேலை செய்து கொடுத்தேன். சின்னமுத்து அட்டை வீடு வைத்துள்ளார். சிந்தமாணி யார் என்று எனக்கு தெரியாது. கிரய ஒப்பந்தம் செய்த பிறகு சிந்தமாணியை தெரியும். வாதியின் கணவர் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார் என்று கேள்விப்பட்டேன். வாதி சிந்தாமணி வீட்டில் தான் இருக்கிறார். பிரதிவாதி சின்னமுத்துவின் அப்பா எனக்கு பழக்கம். பிரதிவாதியின் அப்பாவிற்கு தாரமங்கலத்தில் நிறைய சொத்துக்கள் உள்ளதா என்றால் அப்படி ஏதும் இல்லை. குடியிருக்கும் வீடு மட்டும் தான் எனக்கு தெரியும். தாவா சொத்து சின்னமுத்துவிற்கு பாத்தியப்பட்டது என்று தெரியும். அது எவ்வாறு அவருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 15 செண்ட். மேற்படி 15 செண்ட் நிலத்தில் தான் சின்னமுத்து வீடு உள்ளது. கிரய ஒப்பந்தத்தில் வீடு குறிப்பிடப்பட்டுள்ளது. அது எனக்கு தெரியும். என்னை சாட்சி கையெழுத்து போட சின்னமுத்து தான் அழைத்தார். சின்னமுத்து, வாதி சிந்தாமணியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை. சொத்து தான் விலை பேசினார். மீதி கிரய தொகை கொடுக்க ஒப்பந்தத்தில் 30 மாத காலம் அவகாசம் போடப்பட்டது. சின்னமுத்து தற்போது நேரம் சரியில்லாமல் இருப்பதால், அதனால் 30 மாத காலம் அவகாசம் வேண்டும் என்று கேட்டார். மேற்படி காரணம் கிரய ஒப்பந்ததில் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதி உள்ளார்கள்.

சின்னமுத்து ரூ. 7,00,000/– கடன் வாங்கியுள்ளார் என்றும், அதற்காக நானும், வாதியும் சேர்ந்து ஒப்பந்தம் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சின்னமுத்து, வாதியின் கணவரிடம் வட்டி பணம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அவ்வாறு வட்டி எதுவும் கொடுக்கவில்லை. 03.02.2016 ம் தேதி சின்னமுத்து, வாதியின் கணவருக்கு அவரது வங்கி கணக்கு மூலம் ரூ. 21,000/– கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 30.10.2016 ம் தேதி சின்னமுத்து, அவரது வங்கி கணக்கு மூலம் ரூ. 5,500/– வாதியின் கணவருக்கு கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. சின்னமுத்து, வாதியிடம் வட்டிக்கு பணம் வாங்கியதால் தான் 2018 வரை வாதிக்கு வட்டி கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. கிரையம் தான் பேசினார். வாதி எந்த தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்று எனக்கு நியாபகம் இல்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள 30 மாதம் முடிவடைவதற்கு 4–5 மாதத்திற்கு முன்பாக போய் பிரதிவாதியிடம் கிரய பத்திரம் எழுதி தரச் சொல்லி கேட்டேன். கிரய ஒப்பந்தத்தில் என்னுடன் பிரதிவாதியின் அப்பா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். கடனுக்காக ஒப்பந்தம் எழுதப்பட்டதால் 30 மாத கால அவகாசம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி வீட்டில் பிளமிங் வேலை செய்தேன் என்றும், அதனால் வாதி கேட்டதால் ஒப்பந்ததில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றும், வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையில் உள்ள கொடுக்கல் வாங்கல் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டப்படி ஒப்பந்தம் கிரயத்திற்காக எழுதப்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் கிரய ஒப்பந்தத்தை என்ன சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.